# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No.209/2024

Name : K.S.மனோகரன் (PW7)

Date: 04.07.2026

எதிரிகள் ஆஜரில் இல்லை.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**எதிரி தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை:**

நான் எத்தனை ஆண்டுகளாக காவல் துறையில் பணிபுரிந்தேன் என்றால் 35 வருடங்கள் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். எனக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது சம்மந்தமான நடைமுறைகள் நன்கு தெரியும் என்றால் சரிதான். பொதுவாக மருத்துவமனையில் இருந்து விபத்து வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு தொலைபேசி மூவமாக தகவல் தெரிவிப்பது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு தெரிவிக்கப்படும் தகவல்களை காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சம்பந்தமான தகவலை பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. தங்களால் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையில் Column 3C ல் பொது நாட்குறிப்பில் நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. மேற்படி முதல் தகவல் அறிக்கை தயாரிக்க எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ளப்பட்டது என்றால் சுமார் அரை மணி நேரம் எடுத்துக் கொண்டேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் வரை அசா.1 பூபதி காவல் நிலையத்தில்தான் இருந்தாரா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள Column 15 ல் முதல் தகவல் அறிக்கை எப்போது நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் புகார்தாரருக்கு உடனடியாக நகல் கொடுக்கப்பட வேண்டும் என்றால் சரிதான். அது எத்தனை மணிக்கு கொடுக்கப்பட்டது என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. சட்டப்படியாக செய்யவேண்டிய நடைமுறைகளை கடைப்பிடிக்காததால் முதல் தகவல் அறிக்கை உரிய முறையில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, சரியான நடைமுறையில்தான் பதிவு செய்யப்பட்டது. நான் சொன்ன நாள் மற்றும் நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த புகாரும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

3. முதல் தகவல் அறிக்கை தயாரானவுடன் நீதிமன்றத்திற்கு உடனடியாக கொடுக்கவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். யாரிடம் முதல் தகவல்

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.07.04 17:50:29 +0530

அறிக்கை நீதிமன்றத்திற்கு கொடுத்து அனுப்பப்பட்டது என்ற விவரத்தை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு யாரிடம் முதல் தகவல் அறிக்கையை கொடுத்து அனுப்பினேன் என்றால் ஞாபகம் இல்லை, ஆனால் அன்றே கொடுத்து அனுப்பி விட்டேன். நான் உரிய நேரத்தில் நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை போய் சேர்ந்துவிட்டதா என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். என்னிடம் நீதிமன்றத்தில் முதல் தகவல் அறிக்கையை ஒப்படைத்துவிட்டதாக சொன்னார்கள். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட அன்றே இறப்பும் தெரிவிக்கப்பட்டது. சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையும் நான் தான் தயார் செய்தேன் என்றால் சரிதான், அன்று இரவே தயார் செய்துவிட்டேன்.

4. முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பியபோது இந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை கொடுத்து அனுப்பப்படவில்லை என்றால் கொடுத்து அனுப்பினேன். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கையும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேலும் நீதிமன்றத்திற்கு அவை அனுப்பி வைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சரியான நேரத்தில் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்காத காரணத்தில் 14.12.2022 அன்று தாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை 26.01.2021அன்றே தயார் செய்யப்பட்டதாக கூறப்பட்டாலும், நீதிமன்றத்திற்கு 19.12.2024 அன்றுதான் அனுப்பப்பட்டுள்ளது என்றால் நான் 26.01.2021 அன்றே அனுப்பி விட்டேன். முதல் தகவல்அறிக்கை 20 நாட்கள் தாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பியும், சட்டப்பிரிவு மாறுதல் 3 வருடங்கள் கழித்து நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதால் என்னால் தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் முதல் தகவல் அறிக்கையும், பிரிவு மாறுதல் அறிக்கையும் நம்பத்தகுந்தது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.07.04 17:50:34 +0530